இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 195 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 12 – திங்கள்கிழமை 24 பிப்ரவரி 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 195 : Thiruvalluvar Year - 2056 - Maasi 12 - Monday 24 February 2025 - Madurai 12 Pages ₹ 5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2025) சென்னை, கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பகிர்ந்த பணியிட மையம் மற்றும் மாணவர்களுக்கான “கல்வி மையம்” உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு,அங்கு படிக்கும் மாணவ, மாணவியர்கள் மற்றும் கோஒர்க்கிங் ஸ்பேஸ் எனப்படும் பகிர்ந்த பணியிடத்தில் பணிபுரிவோர்களிடம் உரையாடி, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, கொளத்தூரில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் புதிதாக 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 தளங்களுடன் கட்டப்பட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று (23.2.2025) “பெரியார் அரசு மருத்துவமனை” என்று பெயர் சூட்டப்பட்டு, 28.2.2025 அன்று திறக்கப்படவுள்ள மருத்துவமனையினை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## தமிழ்நாடு முழுவதும் குறைந்த விலையில்

# 1000 இடங்களில் “முதல்வர் மருந்தகங்கள்” திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, பிப். 24 -**

**தமிழ்நாடு முழுவதும் குறைந்த விலையில் 1000 இடங்களில் ‘முதல்வர் மருந்தகங்கள்’ துவக்கப்படும் என்று முதல்வர் அவர்களின் அறிவிப்பை தொடர்ந்து சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று இந்தத் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். சென்னையில் மட்டும் 33 இடங்களில் மருந்தகங்கள் திறக்கப்படுகிறது. இங்கு குறைந்த விலையில் மருந்து மாத்திரைகள் கிடைக்கும்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.08.2024 அன்று சுதந்திர தின விழா உரையின் போது குறைந்த விலையில் (ஜெனரிக்) மருந்து மாத்திரைகளையும் பிற மருந்துகளையும் பொது மக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற் கட்டமாக 1,000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும்” என்று அறிவித்தார்.



இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவது தொடர்பாக 29.10.2024 அன்று முதலமைச்சர் தலைமையில் ஆய்வுக் கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் மருந்தகங்கள் அமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகள், மாவட்ட மருந்து சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல் உள்ளிட்ட ஏற்பாடுகள் குறித்து கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தைச் சேர்ந்தோருக்கு உரிய அறிவுரைகள் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து மக்கள் மருந்தகங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தது. இதற்காக 2000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கூட்டுறவு துறைக்கு வந்திருந்தன. அதில் தகுதியான மனுக்கள் தேர்வு செய்யப்பட்டு முதல் கட்டமாக 840 விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்ததாக ஏற்கப்பட்டு உள்ளது. இவர்களுக்கு கடைகளை ஒதுக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்தது. கூட்டுறவுத்துறைக்கு வந்துள்ள மற்ற மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு வந்தது. இதனடிப்படையில் மேலும் 160 மருந்தகங்கள் அமைப்பதற்கான மனுக்கள் தேர்வு செய்யப்பட்டு மொத்தம் 1000 முதல்வர் மருந்தகங்கள் அமைப்பதற்கான இறுதி கட்டப் பணிகள் நிறைவுற்றன.

இதைத்தொடர்ந்து சென்னையில் மட்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (24.2.2025 - திங்கள்கிழமை) முதல்வர் மருந்தகங்களை தொடங்கி வைக்க உள்ளார்.

இதில் சென்னையில் மட்டும் கொளத்தூர், தியாகராயர் நகர், ஆழ்வார்ப்பேட்டை உள்பட 33 இடங்களில் மருந்தகங்கள் திறக்கப்படுகிறது. இங்கு குறைந்த விலையில் மருந்து மாத்திரைகள் கிடைக்கும்.

முதல்வர் மருந்தகத்திற்குத் தேவையான ஜெனரிக் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும். மருத்துவம் சார்ந்த இதர மருத்துவ உபகரணங்கள், சித்தா, ஆயுர்வேதம், இம்காப்ஸ், டாம்கால் மற்றும் யுனானி மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் நியூட்ராசூட்டிக்கல்ஸ் உள்ளிட்ட மருந்து வகைகள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் தமிழ்நாடு முழுவதும் 1,000 முதல்வர் மருந்தகங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

---

## இந்த இயக்கத்தை அண்ணாவும் கலைஞரும் குடும்பப் பாச உணர்வோடு உருவாக்கியுள்ளனர்!

# அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள்!

## மணவிழாவில் பெற்றோர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, பிப். 24 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொளத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஐ.சி.எப். முரளிதரன் இல்ல மணவிழாவை நேற்று தலைமை ஏற்று நடத்தி வைத்து உரையாற்றினார். அப்போது, பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் ஒரு குடும்பப் பாச உணர்வுடன் இந்த இயக்கத்தை உருவாக்கி உள்ளனர் என்றும், பெற்றோர்கள் பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள் என்றும் வாழ்த்தி உரையாற்றினார்.**

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.02.2025) சென்னை, கொளத்தூரில் நடைபெற்ற கொளத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளரும், தி.மு.க. ஐ.சி.எப். லேபர் யூனியன் பொதுச் செயலாளருமான வ.முரளிதரன் - திருமதி. லதா தம்பதியரின் மகன் மகேஷ்வர் மற்றும் திவ்ய கணபதி ஆகியோரது திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி, ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு கொளத்தூர் கிழக்குப் பகுதியின் செயலாளர் நம்மடைய ஐ.சி. எஃப் முரளி அவர்களின் இல்லத்தில் நடைபெறக்கூடிய மணவிழா இது. அவர் நன்றியுரை ஆற்றுகின்ற போது பேசமுடியாத சூழ்நிலைக்கு அவர் தள்ளப்பட்டு, உணர்ச்சி ததும்ப “எங்கள் குடும்பம் விசுவாசமாக இருக்கும். உங்கள் குடும்பத்திற்கும் விசுவாசமாக இருக்கும்” என்றெல்லாம் எடுத்துச் சொன்னார். நான் முரளி அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது எங்கள் குடும்பம், உங்கள் குடும்பம் என்று பிரிக்க வேண்டாம். இது நம்முடைய குடும்பம். அப்படிப்பட்ட குடும்பத்தை, ஒரு குடும்பப் பாச உணர்வோடு உருவாக்கித் தந்திருக்கக்கூடியவர் நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் கழகத் தோழர்களைப் பார்த்து, தம்பி, தம்பி என்றுதான் அழைப்பார். அதே போல, நம்முடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அனைவரையும் பார்த்து வயது முதிர்ந்தவராக இருந்தாலும், இளைஞராக இருந்தாலும், உடன்பிறப்பே என்று அழைக்கக்கூடியவர். இந்த இயக்கத்தை ஒரு குடும்பப் பாச உணர்வோடு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட உணர்வோடுதான் நம்முடைய குடும்பத்தில் நடைபெறக்கூடிய மணவிழா நிகழ்ச்சியாகக் கருதி, நானும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**சிறப்பான பகுதிக் கழக செயலாளர்களில் ஒருவர் முரளி!**

1983ஆம் ஆண்டிலேதான் நம்முடைய முரளி அவர்கள் இளைஞர் அணியில் பொறுப்பேற்றுக் கொண்டு தன்னுடைய கடமையை நிறைவேற்றத் தொடங்கினார். பொறுப்பேற்ற காலத்திலிருந்து தொடர்ந்து, இந்த இயக்கத்திற்காகப் பாடுபட்டு, உழைத்து, கண்துஞ்சாது, பசி மறந்து பல்வேறு தியாகங்களுக்கு எல்லாம் தன்னை ஒப்படைத்துக் கொண்டு அவர் இந்த வட்டாரத்தில், இந்தப் பகுதியில் பணியாற்றி, படிப்படியாகத்தான்; ஏதோ திடீரென்று நேரடியாகப் பொதுச் செயலாளராக வந்துவிடவில்லை; பகுதிக் கழகத்தின் பிரதிநிதியாக மாவட்டக் கழகத்தின் பிரதிநிதியாக மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளராக; இப்படி படிப்படியாக உயர்ந்து, கழகத்திற்குப் பணியாற்றி ஒரு உரிய அங்கீகாரத்தை அவர் பெற்று, இன்றைக்குப் பகுதிக் கழகத்தின் செயலாளர்களில், அதுவும் சாதாரணமான பகுதிக் கழகச் செயலாளர் அல்ல, சிறப்பான பகுதிக் கழகச் செயலாளர்களில் ஒருவராக, அதுவும் ஓராண்டு ஈராண்டு அல்ல, 16 ஆண்டு காலம் தொடர்ந்து அந்தப் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றிக் கொண்டிருப்பவராக, இன்றைக்கு அவர் தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

எனவே, அந்த உழைப்புக்கும், அவருடைய விசுவாசத்திற்கும்தான் நான் மட்டுமல்ல - இங்கு வந்திருக்கும் அனைவரும் இன்றைக்கு மகிழ்ச்சியோடு வந்திருக்கிறீர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், உழைப்புக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய ஐ.சி.எப். முரளி என்பதை யாரும் மறுத்திட முடியாது.

**75 ஆண்டுகால வரலாறு கொண்டது தி.மு.க.**

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு 75 ஆண்டு காலம். அந்த 75 ஆண்டுகால வரலாற்றைப் பெற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில், இன்றைக்கு இணைத்துக் கொண்டு பல்வேறு பொறுப்புகளை ஏற்று பணியாற்றக் கூடியவர்கள் ஏராளமாக வந்து கொண்டு இருக்கலாம்; அதே போல் தான் நம்முடைய முரளி அவர்கள்

தொடர்ச்சி 3– ஆம் பக்கம்